## பயிர்க்கடன் தள்ளுபடி:

# த.வெ.க. அரசு உணர்ந்து செயல்படுமா?

### ‘தினகரன்’ நாளேடு தலையங்கத்தில் கேள்வி!

**சென்னை, மே 29 - உழவன் சேற்றில் கால் வைத்தால்தான், நாம் சோற்றில் கை வைக்க முடியும். இதை விஜய் தலைமையிலான த.வெ.க. அரசு உணர்ந்து, செயல்படு வதாக தெரியவில்லை என ‘தினகரன்’ நாளேடு தலையங் கத்தில் தெரிவித்துள்ளது.**

அது வருமாறு:-

தமிழகத்தில், கூட்டுறவு வங்கிகளில் குறு மற்றும் சிறு விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன்களை ரத்து செய்வதாக தமிழக அரசு அறிவித்தது. இந்த திட்டத்தின்படி, குறு விவசாயிகளுக்கு ரூ.50,000 வரையிலும், சிறு விவசாயிகளுக்கு ரூ.25,000 வரையிலும் பயிர்க்கடன் தள்ளுபடி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கடன் தள்ளுபடி 2025 மே 1 முதல் 2026 பிப்ரவரி 28 வரையிலான காலக்கட்டத்தில் பெறப்பட்ட கடன்களுக்கு மட்டுமே பொருந்தும். இதன்மூலம் சுமார் 14 லட்சத்து 22 ஆயிரத்து 555 விவசாயி கள் பயனடைவார்கள்.


தினகரன்
மே 28, 2026 வியாழக்கிழமை

யானை பசிக்கு சோளப்பொறி...!

தமிழகத்தில், கூட்டுறவு வங்கிகளில் குறு மற்றும் சிறு விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன்களை ரத்து செய்வதாக தமிழக அரசு அறிவித்தது. இந்த திட்டத்தின்படி, குறு விவசாயிகளுக்கு ரூ.50,000 வரையிலும், சிறு விவசாயிகளுக்கு ரூ.25,000 வரையிலும் பயிர்கடன் தள்ளுபடி கிடைக்கும் என எதிர்பார்க்கப்படுகிறது. இந்த கடன் தள்ளுபடி 2025 மே 1 முதல் 2026 பிப்ரவரி 28 வரையிலான காலக்கட்டத்தில் பெறப்பட்ட கடன்களுக்கு மட்டுமே பொருந்தும். இதன்மூலம் சுமார் 14 லட்சத்து 22 ஆயிரத்து 555 விவசாயிகள் பயனடைவார்கள்.

அதாவது, கூட்டுறவு வங்கிகளில், ரூ.50,000 வரை கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு மட்டுமே 100 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும். சிறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மட்டுமே தள்ளுபடி கிடைக்கும். நடுத்தர மற்றும் பெரும் விவசாயிகளை கணக்கில் எடுத்துக்கொள்ளவே இல்லை. ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் கடன் பெற்ற குறு மற்றும் சிறு விவசாயிகளுக்கு தலா ரூ.5,000

அதாவது, கூட்டுறவு வங்கிகளில், ரூ.50,000 வரை கடன் பெற்ற குறு விவசாயிகளுக்கு மட்டுமே 100 சதவீதம் தள்ளுபடி வழங்கப்படும். சிறு விவசாயிகளுக்கு 50 சதவீதம் மட்டுமே தள்ளுபடி கிடைக்கும். நடுத்தர மற்றும் பெரும் விவசாயி களை கணக்கில் எடுத்துக்கொள்ளவே இல்லை. ஒரு லட்சம் ரூபாய்க்கு மேல் கடன் பெற்ற குறு மற்றும் சிறு விவசாயி களுக்கு தலா ரூ.5,000 கடன் தள்ளுபடி கிடைக்கும். தமிழக அரசின் இந்த அறிவிப்பால், விவசாயிகள் கடும் அதிருப்தி அடைந்துள்ளனர்.

இந்த கடன் தள்ளுபடி பெரும் ஏமாற்றம் தந்துள்ளதாக காவிரி டெல்டா பாசன விவசாய சங்க கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. ஒரு ஏக்கர் நிலம் வைத்திருக்கும் ஒரு விவசாயி, அந்நிலத்தில் எதை பயிரிட்டாலும் குறைந்த பட்சம் முதலீடு ரூ.1லட்சம் தேவை. அந்த அளவுக்கு விவசாய கூலி மற்றும் விதை, உரம் உள்ளிட்ட மூலப்பொருட்களின் விலை உள்ளது. விவசாயிகளின் நிலைமை இவ்வாறு இருக்க, விவசாயி களின் வேதனையை புரிந்து கொள்ளாமல், ரூ.5 ஆயிரம் பயிர்க்கடன் தள்ளுபடி என்பது முற்றிலும் கண்துடைப்பு என்கிறார்கள், விவசாயிகள்.

கடந்த 2021ம் ஆண்டு தி.மு.க. ஆட்சியில், தமிழக அரசு தள்ளுபடி செய்த பயிர்க்கடன் தொகை ரூ.12,110 கோடி. தற்போது தமிழக அரசு தள்ளுபடி செய்துள்ள பயிர்க்கடன் தொகை ரூ.2,044 கோடி. இது, யானை பசிக்கு சோளப்பொறி போன்று உள்ளது. கடந்த தி.மு.க. ஆட்சியுடன் ஒப்பிடும் போது, இந்த பயிர்க்கடன் தள்ளுபடி என்பது மிகப் பெரிய மோசடியாக உள்ளது, வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது போல் உள்ளது என விவசாயிகள் தங்களது எதிர்ப்பை பதிவு செய்துள்ளனர்.

சுமார் ரூ.1.50 லட்சம் பயிர்க்கடன் பெற்ற விவசாயிக்கு வெறும் 5 ஆயிரம் ரூபாய் மட்டும் தள்ளுபடி என்பது முற்றிலும் ஏமாற்று வேலை. தமிழக அரசின் இந்த நடவடிக்கை, விவசாயிகளின் சுமையை குறைப்பதாக இல்லை. மாறாக, அவர்களது முதுகில் குத்தும் செயலாகவே உள்ளது என விவசாயிகள், தமிழக அரசுக்கு எதிராக போர்க் கொடி தூக்கியுள்ளனர்.

கூட்டுறவு கடன் தள்ளுபடி தொடர்பாக விஜய் அரசு தேர்தல் அறிக்கையில் கூறியதை நம்பி வாக்களித்த விவசாயிகளுக்கு நம்பிக்கை துரோகத்தை செய்துள்ளதாக விவசாயிகள் குற்றம் சாட்டி உள்ளனர். இதனால் தமிழகம் முழுவதும் விவசாயிகள், வீதியில் இறங்கி போராடும் நிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். நடிகர் விஜய் ஆட்சிக்கு வந்தால் எல்லாவற்றையும் தலைகீழாக மாற்றிவிடுவார், விவசாயிகளை எங்கோ கொண்டுபோய் விடுவார் என பரப்புரை செய்யப்பட்டது.

ஆனால், இன்று எல்லாம் தலைகீழாக மாறிவிட்டது. விவசாயிகளின் வியர்வையால் தான் மனித குலம் வாழ்கிறது என்பதை யாரும் மறுக்க முடியாது. உழவன் சேற்றில் கால் வைத்தால்தான், நாம் சோற்றில் கை வைக்க முடியும் என்பது பரவலாக நாம் அறிந்த பழமொழி. ஆனால் விஜய் தலைமையிலான அரசு இதை உணர்ந்து, செயல்படுவதாக தெரியவில்லை என்பது தெளிவாகி உள்ளது.

இவ்வாறு அத்தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

---

### களக்காடி எல்லப்பன் தலைமையில் எம்.கிருஷ்ணமூர்த்தி முன்னிலையில்

# ஜாபர்கான்பேட்டையில் முத்தமிழறிஞர் கலைஞர் பிறந்த நாள் விழா!

### திருவுருவச் சிலைக்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன் மாலை அணிவித்து மரியாதை!

சென்னை, மே.28

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 103-வது பிறந்த நாளை முன்னிட்டு, சைதை, ஜாபர்கான் பேட்டை, 139 வது வட்டம், கெங்கையம்மன் கோவில் அருகில் அமைந்துள்ள முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தும் நிகழ்ச்சி 3.6.2026 -புதன்கிழமை அன்று காலை 7 மணிக்கு நடைபெறுகிறது.

நிகழ்ச்சிக்கு பொதுக் குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் தலைமை வகிக்கிறார். பகுதிக் கழகச் செயலாளர் எம்.கிருஷ்ணமூர்த்தி, அட்கோ கமலாநாதன், சை.மு.சேகர் ஆகியோர் முன்னிலையில் மாவட்டக் கழகச் செயலாளர்-முன்னாள் அமைச்சர் மா.சுப்பிரமணியன் கலைஞர் அவர்களின் திருவுருவச் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தி பொதுமக்களுக்கு இனிப்பு வழங்குகிறார்.

இந் நிகழ்ச்சியில் மு. மகேஷ்குமார், எஸ்.குணசேகரன், மா.அன்பரசன், எம்.ஸ்ரீதரன், மின்னல் கந்தப்பன், ப.சுப்பிரமணி, எம்.எஸ்.ஹரிபாபு, டி.என். சிவமணி, சைதை த.சம்பத், வி.பி.ஜானகிராமன், ஆர்.ரமேஷ், கவிதா கௌதமன், சைதை சாதிக், ந.தமிழரசு, எஸ்.பி. கோதண்டம், எம்.நாகா, நா.மணிகண்டன், ஆர். கிருஷ்ணகுமார், நரேஷ் குமார், ஜி.கே.ராமச்சந்திரன், வீ.மதிவாணன், த.மணி, மு.கதிரவன், பொ.பரத்குமார், பி.எஸ். முருகன், அ.அயாத்பாஷா, சாந்தி சுந்தரம், இ.வரதன், மா.ஏழுமலை, பி.எஸ்.பிரகாஷ், பூபதி வெங்கடேசன், சுமதி தீனதயாளன், எல்.சந்திரன், சி.டி.காசிநாதன், து.முரளி, வி.சபரி, அ. சுப்பிரமணி, து.கொடிசுரேஷ், டி.கோபால கிருஷ்ணன், எஸ்.முகமது அலி, ஜி.ஏழுமலை, யமஹா ராஜேஷ், ஜிம்.பிரபு, ம.திலீப்பன், க.ரஞ்சித் மற்றும் பலர் கலந்து கொண்டு சிறப்பிக்கின்றனர். பாபு எல்லப்பன் நன்றி கூறுகிறார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை பொதுக்குழு உறுப்பினர் களக்காடி எல்லப்பன் செய்துள்ளார்.

---

### மாவட்டக் கழக செயலாளர் ஆவடி சா.மு.நாசர் தலைமையில் நடைபெறுகிறது

# திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி அவசர ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் அறிவிப்பு!

திருவள்ளூர், மே 29-

திருவள்ளூர் மத்திய மாவட்ட இளைஞர் அணி சார்பில் மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்களுக்கான அவசர ஆலோசனைக் கூட்டம், வரும் 01-06-2026 திங்கள்கிழமை மாலை 5.30 மணியளவில் பூவிருந்தவல்லியில் உள்ள ஹரிகரன் ரெசிடென்சியில் நடைபெறுகிறது.

இக்கூட்டத்திற்கு திருவள்ளூர் மத்திய மாவட்ட கழக செயலாளரும் முன்னாள் அமைச்சருமான ஆவடி சா.மு.நாசர் தலைமை வகித்து பல்வேறு ஆலோசனைகளை வழங்குகிறார். மாநில இளைஞரணி துணைச் செயலாளர்கள் க.பிரபு கஜேந்திரன், ப. அப்துல்மாலிக், முன்னிலை வகிக்கின்றனர். நகரக் கழக செயலாளர் ஜி.ஆர்.திருமலை வரவேற்புரை ஆற்றுகிறார்.

இந்த கூட்டத்தில் தலைமை செயற்குழு உறுப்பினர்கள் முன்னாள் சட்ட மன்ற உறுப்பினர் ஆ.கிருஷ்ணசாமி, கே.ஜெ. ரமேஷ், மாநில மற்றும் மாவட்ட நிர்வாகிகள் சி. ஜெரால்டு, ம.இராஜி, வி. ஜெ.சீனிவாசன், காயத்திரி ஸ்ரீதர், எஸ்.ஜெயபாலன், பா.நரேஷ்குமார் உள்ளிட்டோரும், பொதுக் குழு உறுப்பினர்கள் த.எத்திராஜ், ஜி.விமல்வர்ஷன், எம்.முத்தமிழ்செல்வன், வி. குமார், ஜெ.மகாதேவன், காஞ்சனா சுதாகர், எஸ்.சங்கர் உள்ளிட்டோரும் கலந்து கொள்கின்றனர். மேலும் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் ஆர். செந்தாமரை, ஜி.சி.சி.கருணாநிதி, வி.ஜெ.உமா மகேஸ்வரன், அக்னி மா.செ.ராஜேஷ், டி.பிரியாகுமார், எஸ். சதீஷ்குமார் மற்றும் ஆவடி மாநகர இளைஞர் அணி நிர்வாகிகள் ஜி.துர்கா பிரசாத், இள.ஸ்ரீதர், முஸ்தபா அஃப்ரிடி, சதீஷ்குமார், மகாபுவனேஷ், ரங்கநாதன் (எ) மகேஷ் உள்ளிட்டோர் பங்கேற்கின்றனர்.

இக்கூட்டத்தில், 1. ஜூன் 3 முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாள் விழா நிகழ்ச்சிகள் 2. கழக ஆக்கப்பணிகள் ஆகிய பொருள் குறித்து ஆலோசனை மேற்கொள்ளப்பட உள்ளது.

எனவே மாநகர, ஒன்றிய, நகர, பகுதி மற்றும் பேரூர் கழக இளைஞர் அணி அமைப்பாளர்கள் மற்றும் துணை அமைப்பாளர்கள் அனைவரும் தவறாமல் கலந்து கொள்ளுமாறு மாவட்ட இளைஞர் அணி அமைப்பாளர் நடுக்குத்தகை கே.சுரேஷ்குமார் அன்புடன் கேட்டுக் கொண்டுள்ளார். நிகழ்ச்சியின் நிறைவில் நகர இளைஞரணி அமைப்பாளர் அ.முகமது ராஷிக் ஹனீப் நன்றி கூறுகிறார்.

---

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### திருமதி தையல்நாயகி முத்துசாமி
### மே 29 (2001)



சென்னை, துறைமுகம் பகுதிக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் – சிவகங்கை மாவட்டக் கழக மகளிர் அணி அமைப்பாளராகவும் பணியாற்றியவர்.

இந்தி எதிர்ப்புப் போராட்டம் – பானை உடைப்புப்போராட்டம் – நீதிகேட்டு நெடும் பயணம் போன்ற கழகம் நடத்திய போராட்டங்களில் பங்கேற்றவர்.

பால்கமிஷன் அறிக்கை தொடர்பாக தலைவரை அவரது இல்லத்தில் கைது செய்ய முற்பட்டபோது, காவல்துறை வாகனம் முன்பு படுத்து மறியல் செய்து, தடியடிக்கு ஆளாகி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டவர்.

இருதய அறுவை சிகிச்சை செய்து கொண்ட நிலையிலும் காரைக்குடியில் சித.சிதம்பரம் அவர்கள் தலைமையில் நடைபெற்ற ஈழத் தமிழர் ஆதரவு ரயில் மறியல் போராட்டத்தில் பங்கேற்று சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

---

### மாவட்ட அமைப்பாளர் கே.வி.லோகேஷ் ஏற்பாட்டில்

# திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி ஆலோசனைக் கூட்டம்!

### மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் சிறப்புரை!

திருவள்ளூர் மே 29:-

திருவள்ளூர் கிழக்கு மாவட்ட இளைஞரணி சார்பில் ஆலோசனை கூட்டம் வல்லூரில் உள்ள மாவட்ட கழக அலுவலகத்தில் நடைபெற்றது. மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் கே.வி. லோகேஷ் ஏற்பாட்டில் நடைபெற்ற இந்த கூட்டத்தில் மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர்கள் மோகன் பாபு, டி.சங்கர், கதிரவன், ஜெ. பிரதாப், தில்லை குமார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இக்கூட்டத்திற்கு மாவட்ட கழக செயலாளர் வல்லூர் எம்.எஸ்.கே. ரமேஷ் ராஜ் தலைமை தாங்கி சிறப்புரையாற்றினார். அப்போது அவர் பேசுகையில், ஜூன் 3ஆம் தேதி முத்தமிழ் அறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு திருவள்ளூர் கிழக்கு மாவட்டம் முழுவதும் இளைஞரணி நிர்வாகிகள் கழகக் கொடி யேற்றி, தோரணங்கள் அமைத்து, ஏழை எளிய மக்களின் பயன்பாட்டிற்கு பல்வேறு நலத்திட்ட உதவிகளை வழங்க வேண்டும் என்றார்.

மேலும் பள்ளிகள் திறக்கப்பட உள்ளதால் மாணவ, மாணவிகளுக்கு நோட்டுப் புத்தகங்கள், கல்வி உபகரணங்கள் உள்ளிட்டவற்றை வழங்கி பிறந்தநாள் விழாவை சிறப்பாக கொண்டாட வேண்டும் என்றும், கழக அரசின் சாதனைகளை எல்.இ.டி திரைகள் மூலம் பொதுமக்கள் பார்வைக்கு கொண்டு செல்ல ஏற்பாடு செய்ய வேண்டும் என்றும் கேட்டுக்கொண்டார்.

தொடர்ந்து அவர் பேசுகையில், “கழகத்தின் நம்பிக்கையாக உள்ள இளைஞர்களாக நீங்கள் தொடர்ந்து சிறப்பாக கழகப் பணியாற்றி, எதிர்காலத்தில் பல்வேறு பொறுப்புகளில் உயர வேண்டும்” என வாழ்த்தினார்.

இந்த நிகழ்ச்சியில் ஒன்றிய, நகர, பேரூர் கழக இளைஞரணி அமைப்பாளரகள் துணை அமைப்பாளர்கள் மற்றும் கழக நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

---

# ஸ்கேன் ரிப்போர்ட்



நிலைத்தன்மை
இல்லாத
அரசியல்

தனித்தன்மை
இல்லாத
மிக்சர் ஆட்சி

நிர்வாகக்
குழப்பங்கள்

திடமற்ற
வழிநடத்தல்

சட்டம் ஒழுங்கு
சீர் குலைவு

வெளிப்படையான
குதிரை பேரம்

அறுதிப் பெரும்பான்மைக்கு
அலைபாயும்
பரிதாபம்

நகைப்பூட்டும்
சிறுபிள்ளைத்
தனங்கள்

மாண்பு குலையும்
அதிகார
மாடங்கள்

அதிகாரிகளின்
கோலோச்சல்

திரைமறைவு
நிழல்
பீடங்கள்

பயிற்சியும்
முதிர்ச்சியும்
அறவே இல்லாத
அப்ரண்டிஸ்
அமைச்சர்கள்

ஆளுமை
இல்லாத
அரிதாரத்
தலைமை...

நாடகபாணி
நடவடிக்கைகள்

தலைமைக்
கழகமான
தலைமைச் செயலகம்

அதில்
சந்தர்ப்பவாத
சங்கமங்கள்..

தமிழ்த் தாய்க்கும்
தலைக்
குனிவுகள்

ஏமாற்றல்
அறிவிப்புகள்

மக்களை கிராக்குகளாக்கும்
பிரேக்கிங் நியூஸ்
கொடுமைகள்..

அண்டை
மாநிலங்களின்
ஏளனங்கள்...

எல்லாமும்
தமிழகத்தை
பின்னோக்கி
நகர்த்துகிறது

பாடுபட்டு
முன்னெடுத்த
மாநிலத்தின்
வளர்ச்சி
பாழாகும்
பரிதாபத்தில்

மொத்தத்தில்

பரிசோதித்து
பார்க்காமல்
அமேசானில்
வாங்கிவிட்ட
பொருளை

ரிட்டர்ன்
பண்ண வழியிருக்கா என
பரிதவிக்கும்
ஆன்லைன்
அரசியல்
பரிதாபத்தில்

“தமிழ்நாடு”


தடுமாறும்
நாடாக...



**மருது அழகுராஜ்**
கழகச் செய்தித் தொடர்புக் குழு துணைத் தலைவர்

---

# அந்துமணி சிந்துமணி



**அந்துமணி :** ஏண்டி சிந்து, தமிழ்நாட்டில் மின் தட்டுப்பாடு இல்லை என்று த.வெ.க. மின்துறை அமைச்சர் கூறியிருக்கிறாரே ?

**சிந்துமணி :** **ஆமாண்டி அந்து; இதைத்தான், முழுப் பூசணிக் காயை இலைச் சோற்றில் மறைக்க முயற்சிப்பது என்பார்கள்.**

**கைப் புண்ணுக்குக் கண்ணாடி தேவை இல்லை என்று வெகுமக்களுக்கு நன்றாகவே தெரியும்.**